வெளியிடுபவர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
திகதி 2021 மார்ச் 04

## இலங்கையில் முதன்முறையாக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைத் தொடங்குதல்

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை இலங்கையில் முதன்முறையாக 2021 மார்ச் 04 அன்று தொடங்கி வைப்பதனை அறிவிப்பதில் இலங்கை மத்திய வங்கி பெருமகிழ்ச்சியடைகின்றது. இத்தொடக்க நிகழ்வைக் குறிக்கும்முகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம அமைச்சரும் நிதித் திட்டமிடல் அமைச்சருமான கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் அவர்கள் மூலம் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் வழங்கி வைக்கப்பட்டது. இத்தொடக்க நிகழ்வில் பணம் மற்றும் மூலதனச் சந்தை அத்துடன் அரச தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ அஜித் நிவாட் கப்ரால், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் அதிமேதகு டேவிட் ஹோலி அத்துடன் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபன நாட்டிற்கான பிரதானி திருமதி. அமீனா ஆரிப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

*''சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்''* என்ற நாட்டம்மிக்க தொலைநோக்கொன்றுடன் கூடிய தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது இலங்கையிலுள்ள அனைத்து தனிப்பட்டவர்களும் தொழில்முயற்சிகளும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய பல வகையான உயர் தரத்திலான, பொருத்தமான, பாதுகாப்பான அத்துடன் வசதியான நிதியியல் உற்பத்திகளுக்கும் சேவைகளுக்கும் நன்கு அறிந்த, நியாயமான மற்றும் சமத்துவமிக்க பெறுவழியினைக் கொண்டிருக்கின்ற நிதியியல் ரீதியாக வசதிக்குட்படுத்துகின்ற இலங்கையினை உருவாக்குவதற்கு பெருமுயற்சியெடுக்கும்.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை உருவாக்கியமை இலங்கை மத்திய வங்கியின் தலைமையிலமைந்த பல ஆர்வலர்களின் முயற்சியொன்றாகும். இது, பொருளாதாரம் முழுவதும் வேறுபட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் நிபுணத்துவத்தினைச் உள்ளடக்கியுள்ளது. இம்முயற்சிகளின் வாய்ப்புமிக்க உயர்வான விளைவுகளைக் கருத்திற்கொண்டு பொருளாதாரத்தில் பல்வேறு நிறுவனங்கள் மூலம் எடுக்கப்பட்ட நிதியியல் வசதிக்குட்படுத்தல் பற்றிய அனைத்து வெவ்வேறான முயற்சிகளையும் தனியொரு திசையில் அணிசேர்ப்பதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் உபாயரீதியாக வடிவமைக்கப்பட்டதாகும். பெறுமதி மதிக்கமுடியாத இப்பயணத்திற்காக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவி அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தினால் நிதியளிக்கப்பட்ட ''IFC-DFAT பணியாற்றும் மகளிர் கருத்திட்டம்'' இன் கீழ் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் ஒரு பகுதியாக ஒவ்வொரு ஆர்வலருக்குமென ஒப்படைக்கப்பட்ட நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்ற நேரம் வகுக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் நடவடிக்கைத் திட்டத்தினைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் அத்துடன் பொருத்தமான கொள்கைசார் வழிகாட்டலை வழங்குதல் என்பன தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தேசியமட்ட முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் என்பன மூலம் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயச் செயலகத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைத் தொடங்கிவைப்பதன் மூலம் நிலைத்திருக்கத்தக்க அத்துடன் வசதிக்குட்படுத்துகின்ற பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு நிதியியல் வசதிக்குட்படுத்தல் அமைப்புமுறைகளை மேம்படுத்துவதற்காக இதனையொத்த முயற்சிகளை எடுத்துள்ள உலகம் முழுவதுமுள்ள 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் இலங்கை இணைந்துகொள்கின்றது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடக்க நிகழ்வுக்குச் சமாந்தரமாக, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் பற்றி குழுக் கலந்துரையாடலொன்று கௌரவ அஜித் நிவாட் கப்ரால், பணம் மற்றும் மூலதனச் சந்தைகள் அத்துடன் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்புகள் இராஜாங்க அமைச்சர், தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. ஜே. பி. ஆர். கருணாரத்ன உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. சன்ன த சில்வா பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர், லங்கா கிளியர், திருமதி. சமந்தனி கிரிவந்தெனிய, முகாமைத்துவப் பணிப்பாளர், சணச இன்டர்நெசனல் பிறைவேட் லிமிடெட், திரு. எம். இராமமூர்த்தி, பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) சமுர்த்தி, வீட்டலகுப் பொருளாதார, நுண்பாக நிதி, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, ஆகியோர் குழு உறுப்பினர்களாக பங்கேற்று இன்று 2020.03.04 பி.ப 2.30 மணியிலிருந்து பி.ப 3.30 மணி வரை இடம்பெற்றது. இக்கலந்துரையாடல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்தின் வியாபாரப் பொருளியல் சிரேஸ்ட பேராசிரியர் எச். டி. கருணாரத்ன மூலம் நெறிப்படுத்தப்பட்டது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை பொதுமக்கள் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.cbsl.gov.lk இல் பெற்றுக்கொள்ள முடியும்.




இடமிருந்து வலம் - திரு. பி. எல். ஜே. எஸ் பாலசூரிய, இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், திரு. கே. எம். எம் சிறிவர்த்தன இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர், அதிமேதகு டேவிட் ஹோலி, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர், பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன், மத்திய வங்கியின் ஆளுநர், கௌரவ மகிந்த ராஜபக்ஷ பிரதம அமைச்சரும் நிதித் திட்டமிடல் அமைச்சரும், கௌரவ அஜித் நிவாட் கப்ரால், பணம் மற்றும் மூலதனச் சந்தைகள் அத்துடன் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்புகள் இராஜாங்க அமைச்சர், திருமதி. அமினா ஆரிப், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபன நாட்டிற்கான பிரதானி